தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-9-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் நூற்புழுவியல் புத்தாக்க பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலையில் அகில இந்திய நூற்புழுக்களுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தில் பணிபுரியும் இளம் விஞ்ஞானிகளுக்கு பத்து நாட்கள் புத்தாக்க பயிற்சி 28-9-2015 அன்று நூற்புழுவியல் துறையில் தொடங்கப்பட்டது. இப்பயிற்சியில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 12 விஞ்ஞானிகள் கலந்து கொண்டார்கள்.

இப்பயிற்சி கையேட்டினை பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர் சி.ஆர். ஆனந்தகுமார் அவர்கள் வெளியிட்டு நூற்புழுக்களின் முக்கியத்துவம் மற்றும் இப்பயிற்சியின் அவசியம் குறித்தும் சிறப்பு உரையாற்றினார்கள். பயிர் நூற்புழுக்களைப் பற்றியும் சுமார் 30 சதவீதம் மகசூல் இழப்பில் இவற்றின் பங்கு பற்றிய முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும் இந்த நூற்புழுக்களை சுற்றுச்சூழல் பேணும் உயிரியல் முறையில் நிர்வகிப்பது குறித்தும் கூறினார்.

வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் எம். மகேஸ்வரன் அவர்கள் அகில இந்திய ஒருங்கிணைந்த நூற்புழு ஆய்வுத்திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த நூற்புழு நிர்வாகத்தின் அவசியம் குறித்தும் பயிர்களில் நூற்புழு எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சி அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

வேளாண் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் முனைவர். கு. ராமராஜ் அவர்கள் நூற்புழுவியல் துறை சாதனைகளைப் பட்டியலிட்டு இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன்கள் குறித்தும், தமிழகத்தில் நூற்புழுவியல் துறையின் வளர்ச்சி குறித்தும், பல்வேறு கால கட்டங்களில் தோன்றிய நூற்புழுக்கள் பற்றி விளக்கி இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

முன்னதாக முனைவர் ச. சுப்ரமணியன், நூற்புழுவியல் துறை, பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் பயிற்சி இயக்குனர் வரவேற்பு உரையாற்றினார். இறுதியாக திருமதி. கி. பூர்ணிமா, பேராசிரியர் மற்றும் பயிற்சி துணை இயக்குனரின் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்